| | | Quarter ended | Nine months ended | Quarter ended | Quarter ended | Nine months ended | Quarter ended |
| | | 31.12.2023 | 31.12.2023 | 31.12.2022 | 31.12.2023 | 31.12.2023 | 31.12.2022 |
| | | (Unaudited) | | | (Unaudited) | | |
| 1 | Total Revenue from Operations | 1,180.62 | 3,630.58 | 1,226.87 | 1,367.25 | 4,199.83 | 1,403.03 |
| 2 | Net Profit for the period (before tax and exceptional items) | 155.58 | 464.17 | 142.05 | 171.85 | 517.42 | 156.50 |
| 3 | Net Profit for the period (before tax) | 155.58 | 464.17 | 142.05 | 171.85 | 517.42 | 156.50 |
| 4 | Net Profit for the period (after tax) | 116.19 | 346.65 | 106.13 | 129.44 | 391.23 | 118.07 |
| 5 | Total Comprehensive Income for the period [Comprising Profit for the period (after tax) and Other Comprehensive Income (after tax)] | 119.80 | 363.97 | 115.72 | 139.19 | 404.54 | 134.98 |
| 6 | Equity Share Capital (Face Value of Re 1/- each fully paid up) | 21.01 | 21.01 | 21.01 | 21.01 | 21.01 | 21.01 |
| 7 | Earnings Per Share (EPS) (for continuing and discontinued operations) (Face value of Re 1/- each) (not annualised) (in Rs.) (a) Basic | 5.53 | 16.50 | 5.05 | 6.12 | 18.47 | 5.57 |
| | (b) Diluted | 5.53 | 16.50 | 5.05 | 6.12 | 18.47 | 5.57 |

Notes:
1 The above is an extract of the detailed format of the standalone and consolidated financial results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Financial Results are available on the Stock Exchange websites, www.bseindia.com and www.nseindia.com and on the Company's website www.sundram.com.
2 The Statutory Auditors have carried out a limited review for the quarter and nine months ended December 31, 2023 and have issued an unmodified report thereon.

Place : Chennai
Date : February 2, 2024

For Sundram Fasteners Limited
Suresh Krishna
Chairman

# நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதியிலும் வெற்றி பெறுவோம்: தி.மு.க. தொண்டர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை, பிப்.3–

**நாடாளுமன்ற தேர்தலில் 40 தொகுதியிலும் வெற்றி பெற சூளுரைப்போம் என தி.மு.க. தொண்டர்களுக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதி உள்ளார்.**

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தி.மு.க. தொண்டர்களுக்கு எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:–

பாரதீய ஜனதா ஆட்சியின் சர்வாதிகார, ஜனநாயக விரோத போக்கிற்கு முடிவுகட்ட வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம்.

மக்கள் தாங்கள் விரும்பிய மொழியில் பேசுவதை, விரும்பிய தொழிலை செய்வதை, விரும்பிய உடையை உடுத்துவதை, விரும்பிய உணவை உண்பதை, விரும்பிய அரசை தேர்ந்தெடுப்பதை உறுதி செய்வதற்கும், இவற்றுக்கு அடிப்படையான மாநில உரிமைகளை கட்டிக்காப்பதற்கும் நாடாளுமன்ற தேர்தலின் வெற்றி மிகவும் முக்கியமானது என்பதை உணர்ந்து, தேர்தல் பணிகளை தி.மு.க. முன்கூட்டியே தொடங்கி மிகுந்த உற்சாகத்தோடு அதனை முன்னெடுத்துச் செல்கிறது.

செய்வதைச் சொல்வோம் என்பது தான் தி.மு.க.வின் தேர்தல் வாக்குறுதி. வங்கிக் கணக்கில் ஆளுக்கு 15 லட்சம் ரூபாய் போடுவோம் என்றோ, ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குவோம் என்றோ, விவசாயிகளின் வருமானத்தை மும்மடங்காக்குவோம் என்றோ வாக்குறுதி அளித்துவிட்டு, எல்லாமே சும்மா என ஏமாற்றுகின்ற பா.ஜனதா போலவோ அதன் கூட்டணியான அண்ணா தி.முக. போலவோ தி.மு.க.வின் நாடாளுமன்றத் தேர்தல் வாக்குறுதிகள் இருக்காது.

### கனிமொழி எம்.பி. தலைமையில் தேர்தல் அறிக்கை

எனவேதான் கனிமொழி எம்.பி. தலைமையிலான தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு, தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களுக்கும் நேரில் சென்று பலதரப்பு மக்களையும் அமைப்புகளையும் சந்தித்து தேர்தல் அறிக்கையைத் தயாரிக்கும் பணியை மேற்கொண்டிருக்கிறது.

இந்தியா கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியமைக்கும்போது, கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகிற பொறுப்பில் தி.மு.க. இருக்கும் என்கிற நம்பிக்கையுடன் பொதுமக்கள் தங்கள் கருத்துகளை நேரிலும், கடிதத்திலும், மின்னஞ்சலிலும், கியூ ஆர் கோடு வாயிலாகவும் வழங்கி வருகிறார்கள்.

திருச்சி விடுதலை சிறுத்தைகள் மாநாட்டில் நான் குறிப்பிட்டதுபோல, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பாரதீய ஜனதா பூஜ்ஜியம் தான். அண்ணா தி.மு.க.வை வைத்து பாரதீய ஜனதா எத்தகைய நாடகத்தை நடத்தினாலும் தி.மு.க. கூட்டணியை வீழ்த்த முடியாது என்பது உறுதி.

### இந்தியாவுக்கே முன்னுதாரணமான ஆட்சி

பாரதீய ஜனதாவுக்கு எதிரான வெற்றிக் கூட்டணி எப்படி அமையவேண்டும் என்பதை கடந்த 2019 நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் அமைத்த கூட்டணி வாயிலாக நிரூபித்துக் காட்டினோம்.

அதனைத் தொடர்ந்து சட்டமன்ற தேர்தலிலும், அதே கூட்டணி உறுதியாகக் களம் கண்டு, வெற்றி பெற்றதன் விளைவாக திராவிட மாடல் அரசு அமைந்து, இந்தியாவுக்கே முன்னுதாரணமாக ஆட்சியை வழங்கி வருகிறது.

மக்களிடம் செல் என்றார் பேரறிஞர் அண்ணா. உங்களில் ஒருவனான நான் அதை வழிமொழிவதுடன், ‘மக்களிடம் செல். மக்களிடம் சொல்’ என ஒவ்வொருவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

$2\frac{1}{2}$ ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை மக்களிடம் சொல்லுங்கள். ஒவ்வொரு குடும்பமும் கழக ஆட்சியின் சாதனைகளால் பெற்றிருக்கும் பயன்களை உணர்த்துங்கள்.

ஒன்றிய பாரதீய ஜனதா அரசு தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சிப்பதை நினைவுபடுத்துங்கள். கடந்த நாடாளுமன்ற தேர்தலை விடவும் கூடுதலான உழைப்பை வழங்கி, கூடுதலான வாக்கு வித்தியாசத்தில், கடந்த முறை மிச்சம் வைத்த ஒற்றை தொகுதியையும் சேர்த்து நாற்பதுக்கு நாற்பது என்ற முழு வெற்றியை உறுதி செய்யுங்கள்.

அந்த இலக்கை தி.மு.க. நிச்சயம் அடைந்துவிடும் என்கிற நம்பிக்கை அண்ணா அறிவாலயத்தில் கழக தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவுடனான சந்திப்பின்போது நிர்வாகிகள் காட்டும் உற்சாகத்திலேயே நன்கு புலப்படுகிறது. அந்த உற்சாகம், தேர்தல் களப்பணிகளிலும் குன்றாமல் குறையாமல் வெளிப்பட வேண்டும்.

நம்மைத் திசைதிருப்ப அவதூறுகளை பரப்புவதில் பாரதீய ஜனதாவும் அண்ணா தி.மு.க.வும் சளைத்தவையல்ல. பொய் வழக்குகளின் பேரில் தங்களை எதிர்க்கும் ஜனநாயக சக்திகள் மீது மிரட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்வது ஒன்றே ஒன்றிய பாரதீய ஜனதா அரசின் பத்தாண்டுகால சாதனையாக இருப்பதால், தி.மு.க.வை மிரட்டி பார்க்கும் வகையிலான ஊடக பரபரப்புக்கான செயல்பாடுகள் இருக்கும்.

எதற்கும் அஞ்சாத இயக்கம்தான் தி.மு.க என்பதை, களத்தில் நாம் ஆற்றும் பணிகள் மூலமாக அவர்களுக்குப் புரிய வைப்போம்.

நாடாளுமன்றத்தில் இடைக்காலப் பட்ஜெட்டை பாரதீய ஜனதா அரசு தாக்கல் செய்திருக்கிறது. அதிலும்கூட தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளது.

முழுமையான பட்ஜெட்டை அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் இந்தியா கூட்டணி அரசு தாக்கல் செய்யும். மாநிலங்களின் நலன்களும் உரிமைகளும் பாதுகாக்கப்படும். அதற்கேற்ற வகையில் வெற்றி பெறுவோம் என அண்ணா நினைவு நாளில் சூளுரைப்போம். பாரதீய ஜனதா அரசை அகற்றியே தீருவோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஓவியம், சிற்பக்கலையில் சாதனை படைத்த 18 கலைஞர்களுக்கு கலைச்செம்மல் விருது

சென்னை, பிப்.3–

ஓவியம், சிற்பக்கலையில் சாதனை படைத்த 18 கலைஞர்களுக்கு கலைச்செம்மல் விருது வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழக அரசு நேற்று வெளி யிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டு துறை, ஓவிய நுண்கலைக்குழு வாயிலாக தமிழகத்தை சேர்ந்த மரபுவழி கலை வல்லுனர்கள், நவீன பாணி கலை வல்லுனர்களின் சாதனைகளை பாராட்டும் வகையில் ஆண்டுக்கு 6 கலைஞர்களுக்கு ‘கலைச் செம்மல்’ விருதும், ரூ.1 லட்சம் பரிசுத் தொகையும் வழங்கி வருகிறது.

அந்த வகையில், ஓவியம் மற்றும் சிற்பக் கலைகளில் சாதனை படைத்த கலைஞர்களை தேர்வு செய்வதற்கான கூட்டம், கலைபண்பாட்டு துறை இயக்குனர் சே.ரா.காந்தி தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், 2021–22ம் ஆண்டு முதல் 2023–24ம் ஆண்டு வரையில் 3 ஆண்டுகளுக்கு 18 கலைஞர்கள் கலைச் செம்மல் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதன்படி, மரபுவழி ஓவியம் பிரிவில் ஓவியர் ராமு என்கிற எஸ்.எஸ்.ராமதாஸ், மணியம் செல்வன், ஏ.ராஜமோகன், வாசுகி லட்சுமி நாராயணன், சோ.வேல்முருகன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், மரபுவழி சிற்பம் பிரிவில் ரா.செல்வநாதன் ஸ்தபதி, கி.ராஜேந்திரன், ரா.ரவீந்திரன், க.பால்ராஜ் ஆகியோரும், நவீன ஓவியம் பிரிவில் அ.விஸ்வம், கோ.சுப்பிரமணியம், எஸ்.வி.பிரபுராம், எஸ்.அருணாகிரி, கே.புகழேந்தி, அதிவீரராம பாண்டியன் ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

நவீன சிற்பம் பிரிவில் ந.கருணாமூர்த்தி, டி.விஜயவேலு, ஹேமலதா ஆகிய 18 கலைஞர்களுக்கு கலைச் செம்மல் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான விருதை, சென்னையில் உள்ள அரசு இசைக்கல்லூரி வளாகத்தில், வருகிற 5ந்தேதி நடைபெறும் நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்க உள்ளார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 12ந்தேதி நடைபெறும் சட்டசபை கூட்டத்தில் உரையாற்ற கவர்னருக்கு சபாநாயகர் நேரில் அழைப்பு

சென்னை, பிப்.3–

தமிழ்நாடு சட்டசபை கூட்டம் வரும் 12ந்தேதி கூடுகிறது. இதற்கான அறிவிப்பை சபாநாயகர் அப்பாவு வெளியிட்டார். இந்த கூட்டத்தில் கவர்னர் ஆர்.என்.ரவி உரையாற்றுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் உரையாற்றுவதற்கான முறையான அழைப்பை கவர்னர் ஆர்.என்.ரவிக்கு சபாநாயகர் அப்பாவு விடுத்துள்ளார். இதற்காக சபாநாயகர் அப்பாவு நேற்று கவர்னர் மாளிகையான ராஜ்பவனுக்கு சென்றார். அங்கு கவர்னர் ஆர்.என். ரவியை சந்தித்து பூங்கொத்து வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

பின்னர், சட்டசபையில் வரும் 12 ந்தேதி காலை 10 மணிக்கு கூட்டத்தில் உரையாற்ற வேண்டும் என்று கவர்னர் ஆர்.என்.ரவியை சபாநாயகர் அப்பாவு கேட்டுக்கொண்டார்.



# பொதுப்பணித் துறையின் தலைமை என்ஜினீயர் அலுவலகத்துக்கு ரூ.23 கோடியில் புதிய கட்டிடம்: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்துவைத்தார்

சென்னை, பிப்.3

**சென்னையில் ரூ.23 கோடியில் கட்டப்பட்டுள்ள பொதுப்பணித்துறை தலைமை என்ஜினீயர் அலுவலக கட்டிடத்தை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.**

பொதுப்பணித்துறை முதன்மை தலைமை என்ஜினீயர் அலுவலகமும், சென்னை மண்டல தலைமை என்ஜினீயர் அலுவலகமும் ஒரே கட்டிடத்தில் செயல்பட்டு வந்தது.

சென்னை மண்டல தலைமை என்ஜினீயர் அலுவலகத்திற்கு போதிய இடவசதி இல்லாததால், தனியாக கட்டிடம் கட்ட முடிவு செய்யப்பட்டது. இதற்காக ரூ.23.05 கோடி ஒதுக்கப்பட்டு 3 தளங்களுடன் 1 லட்சத்து 4 ஆயிரத்து 49 சதுர அடி பரப்பளவில் கட்டுமான பணிகள் நடந்து வந்தது.

முதல் தளத்தில் தலைமை என்ஜினீயர் அறை மற்றும் அலுவலகங்கள், கோட்ட என்ஜினீயர் அலுவலகங்களும், 2ம் தளத்தில் தலைமை கட்டிட கலைஞர் அறை மற்றும் அலுவலகங்கள், நூலகம் மற்றும் கலந்தாய்வுக் கூடமும், 3ம் தளத்தில் கண்காணிப்பு என்ஜினீயர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) அறை மற்றும் அலுவலகங்கள், கூட்ட அரங்கு மற்றும் பிற கட்டிட கட்டுமான உபகோட்டம் அலுவலகங்கள் அமைக்கப்பட்டு உள்ளது.

கட்டுமான பணிகள் நிறைவடைந்ததை தொடர்ந்து கட்டிட திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்த விழாவுக்கு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமை தாங்கினார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புதிய கட்டிடத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

மேலும், பொதுப்பணித்துறை வளாகத்தில் ரூ.70 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மகளிருக்கான உணவுக் கூடமும் திறந்து வைக்கப்பட்டது.

### மின்னணு திரை

இந்த வளாகத்தில் புதிதாக மின்னணு திரை அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பொதுப்பணித்துறையால் மேற்கொள்ளப்படும் அலுவலக கட்டிடங்கள், அரசு மருத்துவமனைகள், அரசு பள்ளிகள், விளையாட்டு திடல்கள், நினைவகங்கள் போன்ற அரசு கட்டிட பணிகள் ஆகியவற்றை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் காட்சிப்படுத்தப்படும். இந்த மின்னணு திரையையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

ரூ.35 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள தரமணி பொதுப்பணித்துறை வளாக நுழைவாயிலும் திறந்து வைக்கப்பட்டது. தரக்கட்டுப்பாட்டு கோட்டங்களுக்கு 20 வகையாக ஆய்வக உபகரணங்கள், 20 வகையான கள ஆய்வு உபகரணங்கள் மற்றும் 8 வகையான மின் உபகரணங்கள் ரூ.6.80 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டு உள்ளது.

இந்த உபகரணங்கள் மூலம் கட்டுமான பொருட்களின் 45 வகையான பண்புகளை கண்டறிந்து தரத்தினை உறுதி செய்ய முடியும். மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து தரக்கட்டுப்பாட்டு கோட்டங்களின் பயன்பாட்டிற்காக இந்த ஆய்வக உபகரணங்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தரக்கட்டுப்பாட்டு என்ஜினீயர்களிடம் வழங்கினார்.

விழாவில் பொதுப்பணித்துறை முதன்மை செயலாளர் பி.சந்திரமோகன், முதன்மை தலைமை என்ஜினீயர் கே.பி. சத்தியமூர்த்தி, சென்னை மண்டல தலைமை என்ஜினீயர் கே.ஆயிரத்தரசு ராஜசேகரன் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

kotak Kotak Mahindra Bank

## கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051 கிளை : 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006.

### அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு**

புல்லர்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் (இனி "FIHFCL" என்று குறிப்பிடப்படும்) 28.06.2021 அன்று கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், ஈடுபெற்ற கடன் அளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் (இனி கேஎம்பிஎல் என்று குறிப்பிடப்படும்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. **திரு. சுல்தான் மைதீன் எஸ், திருமதி. நூர்ஜஹான் எஸ் மற்றும்** M/s. **பி.எம்.எஸ். ஸ்டோர்** ஆகியோர் ஈடுபெற்ற கடன் அளித்தவர்களான கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு கடன் கணக்கு எண். 604107510210985–ன்கீழ் 01.02.2024 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை **ரூ.12,47,899/–(ரூபாய் பன்னிரெண்டு லட்சத்து நாற்பத்தேழாயிரத்து எண்ணூற்று தொன்னூற்றியொன்பது மட்டும்)** மற்றும் 02.02.2024 முதல் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை ‘‘எங்கு எப்படி உள்ளதோ அப்படியே’’ என்ற அடிப்படையில் **20.02.2024 அன்று** நண்பகல் 12.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும். குறைந்தபட்ச விலை: ரூ.4,80,000/– (ரூபாய் நான்கு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) முன்வைப்புத் தொகை ரூ.48,000/– (ரூபாய் நாற்பத்தெட்டாயிரம் மட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 19.02.2024 அன்று மாலை 6.00 மணி (இந்திய நேரப்படி) வரை. **சொத்து விவரம்:** திண்டுக்கல் மாவட்டம், பழனி பதிவு மாவட்டம், வேடசந்தூர் சார் பதிவு மாவட்டம், வேடசந்தூர் தாலுக்கா, கூம்பூர் பழைய நத்தம் ச.எண். 782/2, புதிய நத்தம் ச.எண்.1034/19, விஸ்தீரணம் கிழக்கு மேற்காக இரண்டு பக்கமும் 42.5 அடி, வடக்கிலிருந்து தெற்காக இரண்டு பக்கமும் 54 அடி, மொத்த விஸ்தீரணம் 2295 சதுர அடி நிலம் மற்றும் ஆர்சிசி தளம் போடப்பட்ட கட்டிடம் 763.25 சதுர அடி. எல்லைகள் : வடக்கு : அப்துல் ஹை மற்றும் அப்துல் ரஷீத் ஆகியோருக்கு சொந்தமான வீடு, கிழக்கு : காலி மனை மற்றும் சுற்றுச் சுவர், தெற்கு : அட்டவணை ஏ அயிட்டம் 2 சொத்து, பரிதா பேகத்திற்கு சொந்தமானது, மேற்கு : காலி மனை. மொத்த விஸ்தீரணம் 2295 சதுர அடி நிலம் மற்றும் குடியிருப்பு கட்டிடம் மற்றும் அனைத்து மாமூல் வசதிகள் உட்பட. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. விஷால் ஆதிசேஷன் (+91 9941016600), திரு. ஸ்ரீசரண் (+91 9738931789), திரு. ராஜேந்தர் தஹியா (+91 8448264515)** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.com அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

**இடம் : சென்னை, தேதி: 03.02.2024** **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

## பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம்: செரிப்ரம் ஐடி பார்க் B2 பில்டிங், 5வது தளம், கல்யாணி நகர், புனே, மகாராஷ்டிரா 411014
கிளை அலுவலகம்: பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், 5வது தளம், யூனிட் எண்.508, டெல்டா விங், ரஹேஜா டவர்ஸ், அண்ணா சாலை, சென்னை – 600 002.
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி விவரங்கள்: பெயர் : ரதீஷ் ராமச்சந்திரன் சிங்,
Email Id: Rathish.ramachandran@bajajfinserv.in, Mob No. 9791005322 & 8778385461

### கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002ன் கீழ் (‘சட்டம்’) அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்னணு ஏலத்திற்கான பொது அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்/உடன் கடன்தாரர் பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ('BHFL')க்கு கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்தை அடமானம் வைத்துள்ளார் என்று இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. SARFAESI சட்டம் 2002 மற்றும் அங்குள்ள விதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் மேற்கூறிய அசையா சொத்து ('பாதுகாக்கப்பட்ட சொத்து/சொத்து') கையகப்படுத்தப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி BHFLக்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை, பொருந்தக்கூடிய வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றை பெறுவதற்காக பாதுகாக்கப்பட்ட சொத்து பொது ஏலத்தின் மூலம் விற்கப்படும். கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், விதி எண் 8 மற்றும் 9ன் கீழ் (இனிமேல் விதிகள் என குறிப்பிடப்படுகிறது) பாதுகாக்கப்பட்ட சொத்து விற்பனை மற்றும் "எங்கே இருக்கிறதோ அதுபோல்", "எதுவாக இருந்தாலும்", "எப்படி இருந்தாலும்" மற்றும் "ஆதாரம் இல்லாத" அடிப்படையில்’’ 20/02/2024 அன்று ஏலம் நடைபெறும். மற்றும் அதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

| கடன் கணக்கு விவரங்கள்/ கடன்தாரர்/கள் & உத்தரவாத தாரர்கள் பெயர் மற்றும் முகவரி | 1. மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம் 2. EMDஐ சமர்ப்பிக்க கடைசித் தேதி 3. சொத்தை பார்வையிடுவதற்கான தேதி மற்றும் நேரம் | ✱ ரிசர்வ் விலை ✱ சொத்துக்கான EMD ✱ ஏல அதிகரிப்பு |
|---|---|---|
| LANs : H403HHL0182075, H403HLT0190747, H403HLT0193529 1. எஸ் திவ்யா (கடன்தாரர்) 2. பிஜு அரவிந்த் (உடன் கடன்தாரர்) இருவரது வசிப்பிடம்: 401, இ பிளாக் 4வது தளம், ஆப்டிமா அப்கிரேடு, பலேரிப்பட்டு, அசோக் நிரஞ்சன் நகர், திருவள்ளூர், சென்னை 600071 **மொத்த நிலுவைத் தொகை: ரூ.41,31,977/– (ரூபாய் நாற்பத்தோரு லட்சத்து முப்பத்தோராயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தியேழு மட்டும்) மற்றும் எதிர்கால வட்டி மற்றும் 31/01/2024 முதல் சேர்ந்துள்ள கட்டணம்** | **1) இ–ஏலத் தேதி: 20/02/2024 காலை 11:00 முதல் மதியம் 12:00 மணி வரை வரம்பற்ற 5 நிமிட நீட்டிப்புடன் 2. KYC உடன் EMD சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி: 19/02/2024 மாலை 5:00 மணி வரை. (இந்திய நேரப்படி) 3. பார்வையிடும் தேதி: 05/02/2024 முதல் 17/02/2024 வரை காலை 11:00 மணி முதல் மாலை 4:00 மணி வரை (இந்திய நேரப்படி)** | **ரிசர்வ் விலை: ரூ.27,00,000/– (ரூபாய் இருபத்தேழு லட்சம் மட்டும்) டேவணித் தொகை டெபாசிட்: ரூ.2,70,00/– (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபதாயிரம் மட்டும்) 10% ரிசர்வ் விலை ஏலத் தொகை அதிகரிப்பு ரூ.25,000/– (ரூபாய் இருபது ஐந்தாயிரம் மட்டும்) மற்றும் அதன் மடங்குகளில்** |

**அசையா சொத்து குறித்த விவரம்:** விவசாயம் அல்லாத நிலம், சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். பிளாட் எண்.1E, 401, 4வது தளம், எஸ்பிஏ விஸ்தீரணம் 920 சதுர அடி மற்றும் பிரிவுபடாத பங்கு நிலம் 402 சதுர அடி. அபார்ட்மெண்ட் பெயர் ஆப்டிமா அப்கிரேட் அபார்ட்மெண்ட், அசோக் நிரஞ்சன் நகர், பலேரிப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ளது. சர்வே எண்.89/6, 89/5, 89/4, 89/3, 89/2b, 89/2a, 89/1, 88/5, பூந்தமல்லி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம். கிழக்கு : சாந்தி ஹோம்ஸ் ரியல்டீஸ் நிலம், மேற்கு : சிஎம்டிஏவுக்கு பரிசாக வழங்கப்பட்ட ஓஎஸ்ஆர் மற்றும் லிங்க் ரோடு, வாசுதேவனுக்கு சொந்தமான நிலம், வடக்கு : சாலை, தெற்கு : காசி நாயக்கர் வகையறா நிலம்.

**பொது ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:**

* பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டிற்கு தற்போதைய அல்லது எதிர்கால வில்லங்கங்களை அறிந்தோ அறியாமலோ **"எங்கே இருக்கிறதோ அதுபோல்", "எதுவாக இருந்தாலும்", "எப்படி இருந்தாலும்" மற்றும் "ஆதாரம் இல்லாத"** அடிப்படையில் பொது ஏலம் நடத்தப்படுகிறது. * குறைந்தபட்ச விலைக்கு கீழே பாதுகாக்கப்பட்ட சொத்து விற்கப்படாது. * ஏல விற்பனை இணைய ஏல போர்ட்டல் மூலம் ஆன்லைனில் இருக்கும். * மின்னணு ஏலம் https://bankauctions.inல் **20 பிப்ரவரி 2024 அன்று காலை 11:00 மணி முதல் நண்பகல் 12:00 மணி வரை** ஒவ்வொன்றும் 5 நிமிடங்களுக்கு வரம்பற்ற நீட்டிப்புடன் நடைபெறும். * விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு நிறுவனத்தின் இணையதள URL https://www.bajajhousingfinance.in/auction-noticesஐப் பார்க்கவும் அல்லது எந்தவொரு தெளிவுபடுத்தலுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியுடன் https://bankauctions.in-ல் தொடர்பு கொள்ளவும்.

**தேதி: 03 பிப்ரவரி, 2024** **ஒப்பம்/– ரதீஷ் ராமச்சந்திரன் சிங்,**
**இடம்: சென்னை** **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**

TVS

## சுந்தரம் ஃபைனான்ஸ் லிமிடெட்

CIN: L35999TN1962PLC004943
பதிவு பெற்ற அலுவலகம் & கார்ப்பரேட் அலுவலகம் : 98A, 7வது தளம், டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, மயிலாப்பூர், சென்னை - 600 004
தொலைபேசி : +91 - 44 – 28478500 | தொலைநகல் : +91 - 44 - 28478510 | மின்னஞ்சல் : investorshelpdesk@sfl.co.in | இணையதளம் : www.sundram.com

### 31.12.2023-ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத தனித்த மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள்

(₹ கோடிகளில்)

| வ. எண் | விவரங்கள் | தனித்தது | | | ஒருங்கிணைந்தது | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | முடிவடைந்த காலாண்டு 31.12.2023 | முடிவடைந்த ஒன்பது மாதங்கள் 31.12.2023 | முடிவடைந்த காலாண்டு 31.12.2022 | முடிவடைந்த காலாண்டு 31.12.2023 | முடிவடைந்த ஒன்பது மாதங்கள் 31.12.2023 | முடிவடைந்த காலாண்டு 31.12.2022 |
| | | தணிக்கை செய்யப்படாதது | | | தணிக்கை செய்யப்படாதது | | |
| 1 | வியாபார நடவடிக்கைகளின் மூலம் மொத்த வருமானம் | 1,180.62 | 3,630.58 | 1,226.87 | 1,367.25 | 4,199.83 | 1,403.03 |
| 2 | வரி மற்றும் விதிவிலக்கு வகைகளுக்கு முன் நடப்புக் காலத்திற்கான நிகர இலாபம் | 155.58 | 464.17 | 142.05 | 171.85 | 517.42 | 156.50 |
| 3 | வரிக்கு முன் மற்றும் விதிவிலக்கு வகைகளுக்குப் பின் நடப்புக் காலத்திற்கான நிகர இலாபம் | 155.58 | 464.17 | 142.05 | 171.85 | 517.42 | 156.50 |
| 4 | வரிக்கு பின் நடப்புக் காலத்திற்கான நிகர இலாபம் | 116.19 | 346.65 | 106.13 | 129.44 | 391.23 | 118.07 |
| 5 | நடப்புக் காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் {நடப்புக் காலத்திற்கு வரிக்குப்பின் இலாபம் மற்றும் வரிக்குப்பின் இதர விரிவான வருமானம் உள்ளடங்கியது} | 119.80 | 363.97 | 115.72 | 139.19 | 404.54 | 134.98 |
| 6 | சமபங்கு மூலதனம் (முகமதிப்பு ஒவ்வொன்றும் ரூ.1/- முழுவதும் பெறப்பட்டது) | 21.01 | 21.01 | 21.01 | 21.01 | 21.01 | 21.01 |
| 7 | ஒரு பங்கு வருமானம் (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட இயக்கங்களுக்கு) (முகமதிப்பு ரூ. 1/- ஒவ்வொன்றும்) (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) (ரூபாயில்) | | | | | | |
| | அ. அடிப்படை | 5.53 | 16.50 | 5.05 | 6.12 | 18.47 | 5.57 |
| | ஆ. டைல்யூட்டட் | 5.53 | 16.50 | 5.05 | 6.12 | 18.47 | 5.57 |

குறிப்புகள் :

1 மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் பங்கு சந்தைகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விரிவான தனித்த மற்றும் ஒருங்கிணைத்த நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் இணையதளங்கள் www.bseindia.com, www.nseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.sundram.com ஆகியவற்றில் கிடைக்கும்.

2 31-12-2023 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான நிதிநிலை முடிவானது தணிக்கையாளர்களால் வரையறுக்கப்பட்டுள்ள அளவு தணிக்கை செய்யப்பட்ட மற்றும் திருத்தப்படாத அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இடம் : சென்னை
தேதி : பிப்ரவரி 2, 2024

**சுந்தரம் ஃபைனான்ஸ் லிமிடெட்டிற்காக**
**சுரேஷ் கிருஷ்ணா**
**தலைவர்**

RELIANCE Asset Reconstruction

## ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்

11வது தளம், வடக்குப் பக்கம், ஆர்–டெக் பார்க்,
மேற்கு எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலை, கோரேகான் (கிழக்கு), மும்பை – 400 063

### ஈடுபெற்ற ஆஸ்திகள் விற்பனை அறிவிப்பு (விதி 6(2) மற்றும் விதி 8(6)ஐ பார்க்கவும்)

2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்க) விதிகள், 2002இன் விதி 8 (6)ன் கீழ் அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு. ஈடுபெற்ற கடன் வழங்கியவரிடம் அடமானம்/பிணையமாக வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா/அசையும் சொத்துகள் ஈடுபெற்ற கடன் வழங்கியவரின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் எடுக்கப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இது, ரெலிகேர் ஹவுசிங் டெவலப்மெண்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டின் 29.03.2019 தேதியிட்ட ஒதுக்கீடு ஒப்பந்தத்தின்படி RARC 059 (RHDFCL HL) அறக்கட்டளையின் அறக்கட்டளையான ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்டிற்கு (RARC), ஆதரவாக உங்கள் கடன் கணக்குகளின் நிதி சொத்துக்கள்/ கடன்கள், அதன் உரிமை, பாத்தியதை மற்றும் வட்டி மற்றும் அடிப்படைப் பத்திரங்களுடன் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய ஒப்பந்தத்தின் அடிப்படையில், நாங்கள் உங்கள் ஈடுபெற்ற கடன் வழங்குபவராக மாறிவிட்டோம் மற்றும் முழு ஒப்பந்த நிலுவைத் தொகையையும் திரும்பப் பெற சட்டப்பூர்வமாக உரிமை பெற்றுள்ளோம்.

எனவே, ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கம்பெனி லிமிடெட்டின் கீழ்க்கையொப்பமிட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கீழேயுள்ள அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்கள் பிரிவு 13(2)ன் கீழ் டிமாண்ட் நோட்டீசில் கண்டுள்ள தொகையை மீட்கவும் மற்றும் கூடுதல் வட்டி மற்றும் இதர கட்டணங்களை குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள்/ அடமானதாரர்களிடம் இருந்து வசூலிக்க ஈடுபெற்ற கடன் வழங்கியவரான RARC 059 (RHDFCL HL) அறக்கட்டளையின் அறக்கட்டளையான ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்டின் கீழ்க்கையொப்பமிட்டவரால் 01.03.2024 அன்று ‘‘எங்கு எப்படி எவ்வாறு உள்ளதோ அப்படியே’’ என்ற அடிப்படையில் மின்னணு ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும் என்று 15 நாட்களுக்கு முன்னதாக உங்களுக்கு அறிவிக்கிறார். ரிசர்வ் விலை மற்றும் டேவணித் தொகை டெபாசிட் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | கடன்தாரர்கள் பெயர், சொத்து விவரங்கள், டிமாண்ட் மற்றும் சுவாதீன அறிவிப்பு தேதி | ரிசர்வ் விலை டேவணித் தொகை டெபாசிட் |
|---|---|---|
| 1 | **வெங்கடாச்சலம் R த/பெ. ராமச்சந்திரன் மற்றும் கீர்த்தனா V, இருவரின் வசிப்பிடம்: கதவு எண் 5 மனை எண் E 12 ஸ்ரீ அபார்ட்மெண்ட் அஜீஷ் நகர் மெயின் ரோடு கோடம்பாக்கம் ரங்கராஜபுரம், சென்னை, தமிழ்நாடு– 600 024. மேலும்: கதவு எண். 87, மனை எண். 322, இரண்டாவது தளம், டிரஸ்ட்புரம் 9வது குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை. சொத்து :** அதன் துண்டுகளும் பகுதிகளும். மனை எண். 322, டிஎஸ்.எண்.21, TSLR–ன்படி புதிய டிஎஸ். எண்.21/3, 2வது தளம், கதவு எண்.87, 9வது குறுக்குத் தெரு, பிளாக் எண்.26, டிரஸ்ட்புரம் திட்டம், புலியூர் கிராமம், எழும்பூர் – நுங்கம்பாக்கம் தாலுக்கா, சென்னை மாவட்டத்தில் உள்ள 420 சதுர அடி பிளிந்த் ஏரியா கொண்ட பிளாட் மற்றும் மொத்தம் 797 சதுர அடியில் பிரிவுபடாத பங்கு நிலம் 100 சதுர அடி. எல்லை: வடக்கில் : மனை எண்.321, தெற்கில் : மனை எண்.323, கிழக்கில் : டிரஸ்ட்புரம் திட்டம், மேற்கில் 20 அடி சாலை, விஸ்தீரணம் 797 சதுர அடி. டிமாண்ட் நோட்டீஸ் : 17.11.2017 அன்று ரூ.20,24,787.04/– (ரூபாய் இருபது லட்சத்து இருபத்து நான்காயிரத்து எழுநூற்று எண்பத்தியேழு மற்றும் நான்கு பைசா மட்டும்) மற்றும் வருங்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள். சுவாதீனத் தேதி : 27.03.2023 | ரூ. 13,77,810/– ரூ. 1,37,781/– |

**சொத்தை பார்வையிடுதல் : 28.02.2024 அன்று காலை 11.00 மணியிலிருந்து மதியம் 02.00 மணி வரை**
**ஏலத்தை சமர்ப்பிக்க கடைசி நாள் : 29.02.2024 அன்று மாலை 5.00 மணி வரை**
**மின்னணு ஏலம் நடைபெறும் தேதி : 01.03.2024 காலை 11.00 மணி முதல் பகல் 1.00 மணி வரை ஒவ்வொன்றும் 5 நிமிட நீட்டிப்புடன்**

**விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:**

1. சொத்து ரிசர்வ் விலைக்கு கீழே விற்கப்படாது மற்றும் ஈடுபெற்ற கடன் வழங்கியவரான RARC ஆல் உறுதிப்படுத்தலுக்கு உட்பட்டது.
2. மின்னணு ஏலம் ஆன்லைனில் மெசர்ஸ் சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட், மனை எண்.68, குர்கான், ஹரியானா, பின்கோடு – 122003 மூலம் நடத்தப்படும்.
3. மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்கு முன், ஏலம் எடுப்பவர்கள் முறையான மின்னஞ்சல் முகவரியை வைத்திருக்க வேண்டும் மற்றும் www.bankeauctions.com போர்ட்டலில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து, தங்கள் பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லை மெசர்ஸ் சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட்டிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.
4. மின்னணு ஏலத்தில் பங்கேற்க விரும்பும் வருங்கால ஏலதாரர்களுக்கு M/s. **சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட், (தொடர்புகொள்ள வேண்டிய நபர்: திரு. தரணி கிருஷ்ணா, மொபைல் எண்.+91 9948182222,** Delhi@c1india.com **அல்லது** Support@bankeauctions.com **(உதவி எண்.7291981124, 25, 26)** அவர்களிடம் இருந்து ஆன்லைன் பயிற்சி பெறலாம்.
5. டேவணித் தொகை டெபாசிட் (EMD) RTGS/NEFT நிதி பரிவர்த்தனை மூலம் நடப்பு கணக்கு எண். 6742557088, வங்கியின் பெயர் : இந்தியன் வங்கி, கிளை : சாந்தாகுரூஸ் மேற்கு கிளை, மும்பை 400 054, பலன் பெறுபவர் பெயர் RARC 059 (RHDFCL HL) Trust, IFSC Code: IDIBOOOS010க்கு டெபாசிட் செய்யப்பட வேண்டும். காசோலைகள்/ டிமாண்ட் டிராப்ட் ஆகியவை டேவணித் தொகை டெபாசிட்டிற்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.
6. ரிசர்வ் விலைக்கு கீழே உள்ள ஏலங்கள் மற்றும்/அல்லது டேவணித் தொகை டெபாசிட் செலுத்தப்படாத ஏலங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது. ஏலதாரர்கள் தங்களின் மேலதிக ஏலத் தொகையை ஒவ்வொன்றுக்கும் ரூ.5000க்கு அதிகமாக அதிகரிக்கலாம்.
7. வெற்றி பெற்ற ஏலதாரர் அறிவிக்கப்பட்ட உடனேயே வெற்றி பெற்ற ஏலதாரர் 25 சதவீத ஏலத்தொகை/விற்பனை விலையை (டேவணித் தொகை டெபாசிட் உட்பட) உடனே டெபாசிட் செய்ய வேண்டும். மீதமுள்ள ஏலத்தொகை/விற்பனை விலையில் 75 சதவீத நிலுவை தொகையை வெற்றிபெற்ற ஏலதாரரை அறிவித்த 15 நாளில் இருந்து வெற்றி பெற்ற ஏலதாரர் டெபாசிட் செய்ய வேண்டும்.
8. மேலே குறிப்பிட்டுள்ளபடி வெற்றிபெற்ற ஏலதாரர் விற்பனை விலையை டெபாசிட் செய்யத் தவறினால், டேவணித் தொகை டெபாசிட் உட்பட அனைத்து டெபாசிட்களையும் இழக்க நேரிடும்.
9. வெற்றி பெறாத ஏலதாரர்களின் டேவணித் தொகை மின்னணு ஏல விற்பனை நடவடிக்கைகள் முடிந்த ஏழு நாட்களுக்குள் வட்டி இல்லாமல் திருப்பித் தரப்படும்.
10. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கொடுக்கப்பட்ட விவரங்கள் அவருக்கு தெரிந்த வரை, நம்பிக்கை மற்றும் பதிவுகளின் சிறந்ததாகக் கூறப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி எந்தவொரு பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடல் போன்றவற்றுக்கு பொறுப்பேற்க மாட்டார்.
11. கீழ்க்கையொப்பமிட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு எந்த முன் அறிவிப்பும் இல்லாமல் அல்லது எந்தவித காரணத்தையும் கூறாமல், ஏலத்தை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ அல்லது விற்பனையை ஒத்திவைக்கவோ/தள்ளி வைக்கவோ/ ரத்து செய்யவோ அல்லது விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றவோ முழு உரிமையும் விருப்பமும் உள்ளது.
12. ஏலதாரர்கள் சொத்தின் மீதான வில்லங்கள்/கட்டுப்பாடுகள்/சட்டபூர்வமான நிலுவைகள் குறித்து அறிந்து கொள்ள வேண்டும் மற்றும் அவர்கள் ஏலத்தை சமர்ப்பிக்கும் முன் சொத்து, விஸ்தீரணம், தரம் குறித்து தங்களை திருப்திப்படுத்த வேண்டும். ஆன்லைன் ஏலத்தை சமர்ப்பித்தபின், சொத்துக்கள் மற்றும் பிற விஷயங்கள் மீதான கட்டணங்கள், வேறு எந்த விஷயங்கள் போன்றவற்றின் எந்தவொரு இயல்பான உரிமை கோரலும் ஏற்கப்படாது.
13. கிடைக்கப்பெற்ற பதிவுகளின்படி, இந்த அறிவிப்பின் தேதியின்படி, கீழ்க்கையொப்பமிடப்பட்டவருக்கு சொத்துக்கள் மீதான வில்லங்கம் பற்றிய எந்த தகவல் இல்லை.
14. சொத்து மீது சட்ட ரீதியான ஏதேனும் நிலுவைகள், நிலுவைத் தொகைகள், வரிகள், வாட், டிடிஎஸ், ஜிஎஸ்டி, கட்டணங்கள் அல்லது சொத்து விற்பனைக்கான முத்திரை தீர்வை/பதிவு கட்டணம் ஆகியவை வாங்கியவரையே சாரும்.

**மேலும் விவரங்களுக்கு, 18001039711/18602664111/18003099711ல் தொடர்பு கொள்ளலாம்.**

**கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002ன் விதி 6(2), 8(6) மற்றும் 9 (1) விதிகளின்படி 15 நாட்களுக்கு முன்பான சட்டரீதியான அறிவிப்பு**

கடன்தாரர்கள்/உடன் கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்கள் மேலே குறிப்பிட்டுள்ள தொகையையும் மேலும் மின்னணு ஏலத்திற்கு முன் புதுப்பிக்கப்பட்ட வட்டி மற்றும் துணை செலவுகளையும் செலுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தவறினால் மேலே குறிப்பிட்டுள்ள அடமான சொத்துக்களின் மின்னணு ஏலம் நடைபெறும் மற்றும் நிலுவைத் தொகை ஏதேனும் இருந்தால் வட்டி/செலவுடன் திரும்பப் பெறப்படும். ஏலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதியில் ஏலங்கள் பெறப்படாவிட்டால், எந்தவொரு வருங்கால வாங்குபவருக்கும் மேலே நிர்ணயிக்கப்பட்ட ரிசர்வ் விலையில் அல்லது அதற்கு மேல் தனியார் ஒப்பந்தத்தின் மூலம் இந்த சொத்தை விற்க ஈடுபெற்ற கடன் வழங்கியவருக்கு உரிமை உள்ளது. கடன்தாரர்/ உடன் கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்கள், அடமானச் சொத்தை கையகப்படுத்தும் நேரத்தில் வெளிப்படையான முறையில் தயாரிக்கப்பட்ட பஞ்சமன்வென்டரி அறிக்கையின்படி, சுவாதீன சொத்தில் உள்ள அனைத்து வீட்டுப் பொருட்கள்/தனிப்பட்ட உடமைகளையும் இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து 7 (ஏழு) நாட்களுக்குள் மாற்ற/ அகற்றுமாறு இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. இந்த அறிவிப்பின் தேதியிலிருந்து 7 (ஏழு) நாட்களுக்குள் வீட்டுப் பொருட்கள்/தனிப்பட்ட உடைமைகளை மாற்றத் தவறினால், நிறுவனம் "எங்கே எப்படி இருக்கிறதோ, அப்படியே என்ற நிலையில்" கடன்தாரர்/உடன் கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்களின் சொந்த செலவில் மற்றும் சொந்த பொறுப்பில் அதை அகற்ற/மாற்ற/ அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளும். இது தொடர்பாக எந்தவொரு தரப்பினரும் எழுப்பும் எந்தவொரு கோரிக்கைக்கும் நிறுவனம் பொறுப்பேற்காது.

**இடம்: சென்னை (தமிழ்நாடு), தேதி: 03.02.2024** **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்**

குறிப்பு: SARFAESI **சட்டம், 2002ன் பிரிவு 13(2)இன் கீழ் கோரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்ட பிறகு ஏதேனும் செலுத்தப்பட்ட தொகையானது, நிறைவேற்றப்படும்/செட்டில்மெண்ட் நேரத்தில் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைக் கணக்கிடுவதற்காக கணக்கிடப்படும்.**